நகரமன்றம், குடியாத்தம் நாள் : 12.11.2020

## அறிவிப்பு

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி வியாழன் கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

### முன்னிலை : திரு.பெ.சிசில்தாமஸ்,பி.டெக்., ஆணையாளர்(பொ) நகரமன்ற தனி அலுவலர்

### கூட்ட நிரல்

| வ. எண் | பொருள்கள் நவம்பர் 2020 சாதாரணக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குள் வசிக்கும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை தமிழ்நாடு அரசின் புரட்சித்தலைவி அம்மா ஒருங்கிணைந்த விபத்து மற்றும் ஆயுள் காப்பீடு திட்டத்தில் இணைத்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.170, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி.3) துறை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>(அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ஆ) செலவினம் தொடர்பாக அரசாணையில் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் விலைப்புள்ளி / ஒப்பந்தபுள்ளி கோருவதை தவிர்த்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(இ) www.tipps.in என்ற இணையதள வாயிலாக குடியாத்தம் நகராட்சி எல்லைக்குள் 7278 குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கும் குடும்பங்களாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விவரம் பதிவிறக்கம் செய்யப்பட்டு அப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கூடுதல் விவரங்களை நகராட்சி அலுவலர்களை கொண்டு கணக்கெடுப்பு பணி செய்யப்பட்டு வருவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ஈ) ஒரு குடும்பத்திற்கான பூர்த்தி செய்யப்பட்ட (Pre Populated form) படிவத்தினை இணையதளத்திலிருந்து பதிவேற்றம் செய்து அச்சிட்டு பெற அரசாணையில் தெரிவிக்கப்பட்டபடி ரூ.5.00 வீதம் 7278 | 150 | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>குடும்பங்களுக்கு அச்சிட்டு பெறுவதற்கான செலவீனம் ரூ.36390.00 நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் இத்திட்டத்திற்கான அரசு நிதி பெற்றவுடன் ஈடு செய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(உ) ஒரு குடும்பத்தினை கணக்கெடுப்பு செய்ய அரசாணையில் தெரிவிக்கப்பட்டபடி ரூ.5.00 வீதம் 7278 குடும்பங்களை கணக்கெடுப்பு செய்வதற்கு ரூ.36390.00 நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் இத்திட்டத்திற்கான அரசு நிதி பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ஊ) ஒரு குடும்பம் தொடர்பான பூர்த்தி செய்து பெறப்பட்ட படிவத்தில் உள்ள விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அரசாணையில் தெரிவிக்கப்பட்டபடி ரூ.5.00 வீதம் 7278 குடும்பங்களை பதிவேற்றம் செய்வதற்கு ரூ,36390.00 நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் இத்திட்டத்திற்கான அரசு நிதி பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.3654/2020/எப்1)</td><td></td><td></td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் உள்ள LCV வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் பணிகளுக்கு 6 நபர்கள் தனியார் மையம் மூலம் நியமித்து திடக்கழிவு மேலாண்மை பணிகள் நகரில் சேகரமாகும் குப்பைகளை நுண்ணுர சேகரமையம் மற்றும் உரக்கிடங்கிற்கு கொண்டு சேர்க்கும் பணிக்கு 04.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விவரம்</th></tr>
<tr><td>1</td><td>குடியாத்தம் நகராட்சி பொது சுகாதாரபிரிவிற்கு LCV வாகனங்கள் இயக்க தனியார் மூலம் 6 ஓட்டுநர்கள் நியமனம் செய்தல்</td><td>1. LD Man Power Solution ரூ.486/- நபர் ஒருவருக்கு (இதர படிகள் உள்பட)<br>2. G.Prabakaran ரூ.510/- நபர் ஒருவருக்கு (இதர படிகள் உள்பட)</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய LD Man Power Solution என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3665/2020/எச்1)</td><td>151</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>3</td><td>குடியாத்தம் நகராட்சி சொந்தமான தென் குளக்கரை கடை எண் 12 (வரி விதிப்பு எண். 112) திரு.M.N.பரந்தாமன் என்ற பெயரில் உள்ளதை தன் பெயரில் மாற்றம் செய்து தருமாறு கோரி திரு.ஷாஜஹான் என்பவர் தனது 15.10.2020-ம் தேதிய மனுவில் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> : திரு.M.N.பரந்தாமன் என்பவர் தென் குளக்கரை கடை எண் 12 திரு.ஷாஜஹான் என்பவர்</td><td>152</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தப்பத்திரம் எழுதி தற்போது மேற்படி கடை அன்னார் அனுபோகத்தில் இருந்து வருவதாகவும் திரு.ஷாஜஹான் பெயரில் பெயர் மாற்றம் செய்ய வருவாய் ஆய்வாளர் பரிந்துரை செய்துள்ளதால் அரசாணை (நிலை) எண் 92 நாள். 03.07.2007 படி குத்தகை உரிமையை திரு.M.N.பரந்தாமன் பெயரில் இருந்து தென் குளக்கரை கடை எண் 12 குத்தகை உரிமையை திரு.ஷாஜஹான் என்ற பெயருக்கு மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3559/2020/அ1)** | | |
| 4 | இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் கடையின் உரிமை காலம் (முதல் **மூ**ன்றாண்டுகள்) முடிவடைவதால், மேற்படி கடையினை தொடர்ந்து இரண்டாவது முறை **மூ**ன்றாண்டுகளுக்கு அரசாணை (நிலை) எண்.92 நாள். 03.07.2007 ன்படி 03.12.2020, 30.11.2020 மற்றும் 04.12.2020 ஆகிய தேதி முதல் வாடகை தொகையில் 15% உயர்வு செய்து புதுப்பித்து தொடர்ந்து கடையினை நடத்திக்கொள்ள சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் சம்மத கடிதம் கோரப்பட்டது. இதில் கீழ்கண்ட 9 குத்தகைதாரர்களும் மேற்படி கடையினை தொடர்ந்து நடத்தி கொள்ள சம்மதம் தெரிவித்து எழுத்து முலமாக கடிதம் கொடுத்துள்ளார். எனவே, மேற்படி கடையினை அன்னார் தொடர்ந்து நடத்தி கொள்ளவும், கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்திய பின்பு கலம் எண்.2-ல் காணும் கடையின் குத்தகைதாரர்களுக்கு கலம் எண். 5-ல் காணும் காலத்திற்கு குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்க நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 153 | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | வ.வி எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | குத்தகை முடிவடையும் காலம் | புதுப்பிக்க வேண்டிய காலம் | மாத வாடகை | 15 உயர்வு | புதுப்பிக்கப்பட்ட பின் நிர்ணயம் செய்யப்படும் வாடகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| மேற்கு குளக்கரை | | | | | | | | |
| 1 | 58 | எஸ்.நித்தியானந்தம் | 4 | 03.12.2020 | 04.12.2020 முதல் 03.12.2023 | 3149 | 472 | 3621 |
| 2 | 59 | எஸ்.இளங்கோ | 5 | 03.12.2020 | 04.12.2020 முதல் 03.12.2023 | 3964 | 595 | 4559 |
| 3 | 61 | எ.சாந்தி | 7 | 30.11.2020 | 01.12.2020 முதல் 30.11.2023 | 3353 | 503 | 3856 |
| 4 | 63 | எஸ்.இளங்கோ | 9 | 30.11.2020 | 01.12.2020 முதல் | 3455 | 518 | 3973 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 30.11.2023 | | | |
| 5 | 64 | எஸ்.கிருஷ்ணமுர்த்தி | 10 | 30.11.2020 | 01.12.2020 முதல் 30.11.2023 | 3411 | 512 | 3923 |
| 6 | 68 | அங்கையற்கண்ணி | 14 | 30.11.2020 | 01.12.2023 முதல் 30.11.2023 | 3394 | 509 | 3903 |
| 7 | 72 | எம்.ராமநாதன் | 18 | 30.11.2020 | 01.12.2020 முதல் 30.11.2023 | 3394 | 509 | 3903 |
| 8 | 78 | எஸ்.கல்யாண சுந்தரம் | 24 | 30.11.2020 | 01.12.2020 முதல் 30.11.2023 | 3343 | 501 | 3844 |
| தென் குளக்கரை | | | | | | | | |
| 9 | 107 | இ.ஆர்.மேகநாதன் | 7 | 04.12.2020 | 05.12.2020 முதல் 04.12.2020 | 4500 | 675 | 5175 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.846/2012/அ1)

5 | இந்நகராட்சியில் பணிபுரிந்து 20.04.2011 பணியிடை காலத்தில் காலமான திரு.கோவிந்தராஜ் என்பவரது கணக்கில் உள்ள சிறப்பு சேமநல நிதித் தொகை, வட்டி கணக்கிட்டு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | 154 | அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியாளரின் வாரிசுதாரர் பெயர் | தற்போது வழங்க வேண்டிய தொகை | | |
|---|---|---|---|---|
| | | சிறப்பு சேமநல நிதித் தொகை | வட்டி | மொத்தம் |
| 1 | திருமதி.கவிதா, க/பெ.கோவிந்தராஜ் துப்புரவு பணியாளர், 1-வது பிரிவு | **2,960** | **2,469** | **5,429** |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7682/2014/பி2)

6 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 20 எண்ணிக்கையிலான அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - 5 அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/16/12 நாள் : 26.10.2017-ன்படி ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி வெல்டிங் மற்றும் ஒர்க்ஸ், குடியாத்தம் என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு அந்நிறுவனம் மூலமாக தற்போது இப்பணி 22.10.2020 அன்றுடன் முடிவடைவதால் மீண்டும் 23.10.2020 முதல் ஓராண்டுக்கு தொகை 1 நபர்க்கு ரூ.398 வீதம் வழங்கவும், மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்ற | 155 | அனுமதிக்கப்பட்டது

<table>
<tr><td></td><td>பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுலவக குறிப்பு : அ) மன்றம் அனுமதிக்கலாம். ஆ) மேற்காணும் செலவினத்தை கல்வி நிறுவனத்தின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3237/2016/எச்1)</td><td></td><td></td></tr>
<tr><td>7</td><td>இந்நகராட்சி JCB வானத்திற்கு டயர்கள் மற்றும் டியூப்கள் புதியதாக வாங்க 27.10.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் விவரம்</th><th>டயர்கள் மற்றும் டியூப்கள் விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>Sri Balaji Tyres,<br>No.288-A2, Bazaar St.,<br>Thalayatham, Gudiyatham</td><td>ரூ.71000/-</td></tr>
<tr><td>2</td><td>Sri Lakshmi Traders,<br>No.12/A, Palamner Road,<br>Kondasamudram, Gudiyatham</td><td>ரூ.72500/-</td></tr>
<tr><td>3</td><td>Sanju Tyres,<br>No.34/A3, Palamner Road,<br>Kondasamudram, Gudiyatham</td><td>ரூ.71800/-</td></tr>
</table>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 Sri Balaji Tyres, Gudiyatham என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3599/2020/எச்1)</td><td>156</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>8</td><td>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு TN 23 CW 9331 TATA ACE பேட்டரி பழுதடைந்துவிட்டதால் புதிதாக பேட்டரி வாங்குவதற்கு 24.02.11.2015 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>வேலூர் பேட்டரி சென்டர்<br>19, காட்பாடி ரோடு, வேலூர்</td><td>ரூ.3,300/-</td></tr>
<tr><td>2</td><td>தி ஆட்டோ டீசல் சர்வீஸ்<br>67ஏ, காட்பாடி ரோடு, வேலூர்</td><td>ரூ.4,100/-</td></tr>
<tr><td>3</td><td>வேலூர் பேட்டரி கேர்<br>2/ஏ, புதிய காட்பாடி ரோடு,</td><td>ரூ.3,950/-</td></tr>
</table></td><td>157</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | (ஆரியஸ் ஓட்டல் அருகில்)<br>வேலூர்<br>வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 வேலூர் பேட்டரி சென்டர், 19, காட்பாடி ரோடு, வேலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4245/2014/எச்1) | | |
| 9 | இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் உதிரிப்பொருட்கள் கற்பகம் கூட்டுறவு அங்காடி, வேலூர் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய ஆகும் செலவினத்தொகை ரூ.99800/-க்கு மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று முன் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ1/3768/2020) | 158 | அனுமதிக்கப்பட்டது |

தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
குடியாத்தம் நகராட்சி.

நகரமன்றம், குடியாத்தம் நாள் : **17.11**.2020

## அறிவிப்பு

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

### முன்னிலை : திரு.வி.நித்தியானந்தன்,பி.ஏ., ஆணையாளர்
### நகரமன்ற தனி அலுவலர்

### <u>கூட்ட நிரல்</u>

| வ. எண் | பொருள்கள் நவம்பர் 2020 சாதாரணக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான TN 23 CZ 3137 Scorpio வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் காலமுறை சர்வீஸ் மற்றும் பழுதுகளை சரி செய்வதற்கு ஆகும் செலவின தொகை ரூ.53,705/-ஐ "ஜெயின் கார்ஸ்" வேலூர் நிறுவனம் மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று முன்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.இ1/466/2020) | 159 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | குடியாத்தம் நகராட்சி 2018 ஆம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லை என்ற சான்று - மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சியில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொது | 160 | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>கழிப்பறைகள் கட்டுதல் பணிகள் மேற்கொண்டு முழுமை அடைந்த நிலையில், தற்போது திறந்தவெளி கழிப்பிடங்களற்ற நகராட்சியாக அறிவிக்க (ODF+)–க்கு 21.10.2020 அன்று மன்றத்தில் தீர்மானம் அனுமதி பெறப்பட்டு, பொதுமக்களின் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் 15 நாட்களுக்குள் ஆணையாளர், குடியாத்தம் நகராட்சிக்கு அனுப்ப தெரிவித்து 30.10.2020 அன்று தினத்தந்தி மற்றும் மாலைமலர் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. தற்போது எந்தவித ஆட்சேபனையும் பொதுமக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் (ODF+) விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.எச்1/581/2015)</td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வண்டி எண்.TN 23 CW 9363 மற்றும் TN 23 CW 9315 TATA ACE வானத்திற்கு டயர்கள் மற்றும் டியூப்கள் புதியதாக வாங்க விலைப்புள்ளிகள் 16.11.2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் விவரம்</th><th>டயர்கள் மற்றும் டியூப்கள் விலைப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>Sri Balaji Tyres,<br>No.288-A2, Bazaar St.,<br>Thalayatham, Gudiyatham</td><td>ரூ.25900/-</td></tr>
<tr><td>2</td><td>Sri Lakshmi Traders,<br>No.12/A, Palamner Road,<br>Kondasamudram, Gudiyatham</td><td>ரூ.27900/-</td></tr>
<tr><td>3</td><td>Sanju Tyres,<br>No.34/A3, Palamner Road,<br>Kondasamudram, Gudiyatham</td><td>ரூ.26600/-</td></tr>
</table>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 Sri Balaji Tyres, Gudiyatham என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3793/2020/எச்1)</td><td>161</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>4</td><td>இந்நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை, பேவர்பிளாக் சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்க திட்டப்பிரேரணை தயார் செய்யப்பட்டது. மேற்காணும் திட்டத்தில் பணிகளுக்கான நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பெற மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.</td><td>162</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| சிப்பம் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| Package - I | Providing BT Surface and CC Paver Block with Drain to Zubeda Nagar, Aliyar Street, Dhandapani Kovil $2^{nd}$ Street, Selva Vinayagar Kovil Street, Dhandapani Kovil Street Opposite Lane, Thoppu Street at Ward No.1, 2, 7 & 9 | 89.00 |
| Package - II | Providing BT Surface with Drain at Kattabomman Street to Ashok Nagar, Seruvangi Ovvai Nagar, Thalayatham Colony in Ward No.15, 34 & 36 | 103.25 |
| Package - III | Providing CC Paver Block with Drain to Bhudar Nagar with SWD in Ward No.29 | 107.75 |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக ஒப்புதல் பெறவும் முதன்மை பொறியாளர், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/3768/2020)

தனி அலுவலர் / ஆணையாளர்
குடியாத்தம் நகராட்சி.

நகரமன்றம், குடியாத்தம் நாள் : **30.11**.2020

## அறிவிப்பு

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதி திங்கள் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்.

### முன்னிலை : திரு.வி.நித்தியானந்தன்,பி.ஏ., ஆணையாளர் நகரமன்ற தனி அலுவலர்

### கூட்ட நிரல்

| வ. எண் | பொருள்கள் நவம்பர் 2020 அவசரக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.320.00 இலட்சம் மதிப்பீட்டில் உள்ளி உரக்கிடங்கில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண்.26888/UGSS-2/2018-19 நாள் : 29.01.2019 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காணும் பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு திட்டத்திற்கான உபவிதிகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ1/1056/2018) | 163 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | இந்நகராட்சியில் பணிபுரிந்து 01.08.2020 பணியிடை காலத்தில் காலமான திரு.சீனிவாசன் என்பவரது கணக்கில் உள்ள சிறப்பு சேமநல நிதித் தொகை, வட்டி கணக்கிட்டு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. | 164 | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>

| வ. எண் | பணியாளரின் வாரிசுதாரர் பெயர் | தற்போது வழங்க வேண்டிய தொகை | | |
|---|---|---|---|---|
| | | சிறப்பு சேமநல நிதித் தொகை | வட்டி | மொத்தம் |
| 1 | திருமதி.தேன்மொழி,<br>க/பெ.சீனிவாசன்<br>துப்புரவு பணியாளர். | 2,960 | 35,522 | 38,482 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7682/2014/பி2)
</td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td>

சட்டபேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் உடற்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்க தெரிவிக்கப்பட்டதன் பேரில் இந்நகராட்சியில் மேற்காணும் திட்டப்பணிகள் மேற்கொள்ள இடம் தேர்வு செய்து பணிகளுக்கான மதிப்பீடு தயார் செய்து மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Yoga Centre at Raja Nagar Park site @ Ward No.11 in Gudiyatham Municipality | 13.00 |
| 2 | Providing Gym room cum Gym Materials at Raja Nagar Part site @ Ward No.11 in Gudiyatham Municipality | 10.00 |
| | Total | 23.00 |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளுக்கு உண்டான மதிப்பீடு தொகையினை நகராட்சி பொதுநிதி அல்லது தனியார் பங்களிப்பு பெற்று செயல்படுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3686/2020)
</td><td>165</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

தனி அலுவலர் / ஆணையாளர்
குடியாத்தம் நகராட்சி.